

**Long-Term Care Home Update** | *Community Newsletter*

நீண்டகால பராமரிப்பு இல்ல அண்மைய தகவல்கள் சமூக செய்திக்கடிதம்

**ஒக்ரோபர்2021**



## இல்லத்தின் புதிய நிர்வாகியிடமிருந்து ஒரு கடிதம்

Durham Region டுர்றம் பிரதேச சமூகத்தினருக்கு,

எனது பெயர் Jennifer Bishop ஜெனிஃபர் பிஷொப். தற்போது Ajax Pickering Hospital ஏஜக்ஸ் பிக்கரிங் வைத்தியசாலையில் கட்டுமானத்திலுள்ள நீண்டகால பராமரிப்பு இல்லத்தின் புதிய நிர்வாகியாக என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதை கௌரவமாகக் கொள்கிறேன். எனது பங்களிப்பின் முக்கியபகுதியானது எமது சமூகத்துடன் இணைவதாகும். 2022ல் இல்லம் திறக்கப்படமுன்னர் என்னை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்துவதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

Ottawaவில் வளர்ந்து பாடசாலைக்குச் சென்றேன்; இருப்பினும், Durham Region டுர்றாம் பிரதேசத்தையே எனது இருப்பிடமாகக் கடந்த 22 வருடங்களாகக் கருதியுள்ளேன். 13 வருடங்களாக Fairview Lodge Long-Term Care Home in Whitby விற்பியிலுள்ள ஃபயர்வியூ லொட்ஜ் நீண்டகால பராமரிப்பு இல்லத்தில் உட்பட இரு தசாப்தங்களுக்கும் மேலாக இப்பிரதேசத்திற்காகவும் நான் கடமையாற்றியுள்ளேன். Fairview Lodge இல் 2014ல் ஏற்பட்ட தீவிபத்து உங்களில் சிலருக்கு ஞாபகமிருக்கலாம். இது பலருக்கும் சவாலான நேரமாக இருந்தபோதிலும், எமது சமூகம் ஒன்றுபட்டு வந்து வதிவாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஆதரவளித்தமை மனதைத்தொடுவதாயிருந்தது. Fairview Lodgeஇல் எனது காலத்தின்போது இல்லத்தின் புணர்நிர்மானம், மீள்கட்டமைப்பு என்பவற்றை ஒருங்கிணைக்க நானும் பங்களித்தமை, Lakeridge Health லேக்றிஜ் ஆரோக்கியத்தில் எனது அண்மைக்கால செயற்பாட்டில் ஒரு முக்கியமான பகுதியாகும்.

Lakeridge Health சமூகத்தின் ஒருபகுதியாக இப்போது சிலகாலம் நான் இருக்கக்கிடைத்தமை எனது பெறும்பேறாகும். August 2020இலிருந்து Lakeridge Healthஇன் கட்டுமானக் குழுவிற்கு Ajax Pickering Hospitalக்கு அருகேயுள்ள புதிய இல்லத்தின் வடிவமைப்பில் நீண்டகால பராமரிப்புசார் கருத்துகளை வழங்குவதன் மூலம் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்க வாய்ப்புக் கிட்டியது.

அண்மையில், இல்லத்தினுட்பகுதியைச் சுற்றிப்பார்க்கக் கிடைத்தது. நம்பமுடியதளவிலான முன்னேற்றங்கள் நடந்துகொண்டிருப்பதைக் காண்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. இந்த இல்லத்தினை இவ்வளவு விரைவாகப் பூர்த்தி செய்வதில் அளிக்கப்பட்ட பலரினது முயற்சியினளவும் அர்ப்பணிப்பும் பற்றி நாம் எல்லோரும் பெருமைப்படவேண்டும்.

இல்லம் திறக்கப்பட்டதும், முழு இல்லத்தினதும் சிறப்பான இயக்கத்திற்கான வலுவான தலைமைத்துவத்தை வழங்குவதனை உறுதிப்படுத்துவது எனது வேலையாகும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கும். தத்தமது பல்வேறு பங்களிப்புகளில் வருங்கால குழு அங்கத்தினருக்கு ஆதரவுவழங்கி அவர்களுக்கான அதிகாரத்தை அளித்தல், குடும்பங்களுடன் தொடர்பாடுதல், வதிவாளர்களுக்கான தனிப்பட்ட பராமரிப்பினை தருவதற்குதவும் ஆதரவினை அலுவலர்களுக்கு வழங்கி செற்படக்கூடியதாக்குதல், சட்டபூர்வமாகத் தேவையாவற்றையும் மேற்பார்வையிடல், மற்றும் மிக முக்கியமாக, அதிஉயர்தரபராமரிப்பினை உறுதிசெய்தல்.

Durham Region முதியோருக்கும் வயதாகும் சமூகத்திற்கும் பாதுகாப்பான, கருணையுடன்கூடிய, தனிப்பட்ட பொருத்தமுள்ள பராமரிப்பை வழங்குவதையே எனது இலக்காக நான் எப்போதும் கொண்டுள்ளேன். இரு குழந்தைகள், இரு வளர்ப்புக் குழந்தைகள் கொண்ட ஒரு தாயாக, குடும்பம் என்பதும் எனக்கு மிக முக்கியமானது. இதன் காரணமாகவே நான் தொடர்ந்தும் ஒரு ஆரோக்கியமான வேலையிடம், குடும்பசூழலுள்ள வதிவிடத்தை - இங்கு வாழ்வோர், அலுவலர்கள் அவர்களது அன்புக்குரியோர் யாவருக்கும் வழங்கிவளர்க்கவல்ல ஒரு கலாசாரத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளேன். எனது பெருவிருப்புணர்வு, திறமை, அனுபவம் என்பவற்றை Ajaxஇலுள்ள இந்தப் புதிய நீண்டகால பராமரிப்பு இல்லத்திற்கு நிர்வாகி என்றமுறையில் வழங்க வருவதில் அளவற்ற உற்சாகம் கொண்டுள்ளேன்.

இறுதியாக, சமூகத்தினைப் பாராட்ட நான் விரும்புகின்றேன். உங்களது ஆதரவும் ஈடுபாடும் இல்லத்தின் விருத்தியில் அளப்பரிய பங்கினை வகித்துள்ளது. எமது தலைசிறந்த சமூகத்தை இல்லம் பிரதிபலிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. மிக விரைவில் உங்களைச் சந்தித்து இல்லத்திற்கு வரவேற்பதனை ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

எதிர்வரும் மாதங்களில் எமது நடைமுறைகளை புதிய இல்லத்தில் படிப்படியாக ஆரம்பிக்கத்திட்டமிடும்போது போது உங்களோடு நான் தொடர்பில் இருப்பேன். அதேவேளையில், உங்களுக்கு என்னிடம் அல்லது இல்லத்தைப்பற்றி ஏதும் கேள்விகளிருந்தால் மின்னஞ்சல் ஒன்றை AjaxLTC@lh.ca என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்.

உண்மையுள்ள,

Jennifer Bishop

## இந்த மாதத்து கட்டுமான முன்னேற்றம்
## This Month's Construction Progress

Ajax Pickering வைத்தியசாலைக்கருகில் உள்ள நீண்டகால பராமரிப்பு இல்லத்தின் கட்டுமானம் திட்டமிட்டபடி செல்வதுடன் இல்லத்தின் உள்ளே முன்னேற்றம் எமது எதிர்பார்த்த March 2022 திறப்புநிகழ்வினை நோக்கி விரைகின்றது.

உள் முடிவாக்கம் முதலாம் இரண்டாம் தளங்களில் தொடர்கின்றது. அர்ப்பணிப்புள்ள வர்த்தகக் குழுவினர்கள் இறுதிநிலை வேலைகளைச் செய்கின்றனர். முழுஇல்லத்திலும் இறுதிவேலைகள் முடிவுறும்வரை இந்தச் செயற்பாடு அடுத்த சில மாதங்களுக்குத் தொடரும். வடிவமைப்பு மற்றும் கட்டுமானக்குழுக்கள் இந்தமாதம் ஒரு மாதிரி வதிவாளர் அறையினைப் பூர்த்தி செய்துள்ளனர். இந்த அறை – தளபாடங்கள், கழிவறை, ஒளி பொருத்துகைகள் மற்றும் ஒரு புதிய நிறப்பூச்சு அடித்தல் பெற்று நிறைவுறும் போது இது ஏனைய அறைகளுக்கான முன்மாதிரியாகப் பயன்படுத்தப்படும்.

இல்லத்தின் உள்ளே அநேமான முன்னேற்றங்கள் நடைபெற்றுவிட்ட அதேவேளையில் நீங்கள் இல்லத்தின் வெளிப்புறத்தில் சிலர் மாற்றங்களை அவதானித்திருக்கலாம். வெளிப்புறக் காப்பும் பாதுகாப்புக்கட்டமைப்பும் இருநிற பக்கஅமைப்பினால் மறைக்கப்படுகின்றது. வரும்வாரங்களில் கட்டுமான மின்தூக்கிகள் குலைப்படுவதுடன் 24 வதிவாளர்கள் மாடங்களும் பூர்த்திசெய்யப்படும். இல்லத்தினை Lakeridge Healthஇன் ஏற்கனவே உள்ள தெருக்களுடன் இணைக்கும் தெரு வலையமைப்பு, பாதையோரத்தடை நிறுவுகை மற்றும் இறுதி மேல் நிலப்பூச்சு பெறுவதன் மூலம் இறுதிபூர்த்தியாக்கத்தை அண்மிக்கின்றன.

புதிய கார் தரிப்பிடத்தின் முதலாவது பகுதி கொன்கிறீட் அத்திவாரமும் இம்மாதம் ஊற்றப்பட்டுள்ளது. இது நிறைவுபெற்றதும் புதிய கார்தரிப்பிட கட்டமைப்பு 500+ க்கும் மேற்பட்ட கார் தரிப்பிட வசதியை நீண்டகால பராமரிப்பு இல்லத்திற்கும் வைத்தியசாலை குழு அங்கத்தினர், வதிவாளர்கள், வருகையாளர்கள், குடும்ப அங்கத்தினர்களுக்கும் உருவாக்கித் தரும்.

?

**உங்களுக்குத் தெரியுமா**

ஒக்ரோபர் மாதத்தில் எந்த ஒரு நாளிலும் 100க்கும் மற்பட்ட வர்த்தகதுறைசார் ஆண்களும் பெண்களும் களத்தில் காணப்பட்டனர்?

## November நவம்பரில் எதை எதிர்பார்க்கலாம்

வரும் வாரங்களில் இல்லத்தின் உள் வெளிப்புறங்கள் அனைத்திலும் மேலும் மாற்றங்களை எதிர்பார்க்கின்றோம்.

இரண்டாம் மாடியில், அத்தளத்தின் 64 அறைகள் கொண்டதன் ஒரு பகுதியாக நடத்தைப் பிரிவு பூர்த்தியாக்கப்படும். முதலாம் தளத்தில் உள்ள பொது மற்றும் ஆதரவுப் பகுதிகள் பூர்த்தியின் இறுதிக்கட்டத்தில் இருக்கும். அத்துடன் அநேகமான மேல் மாடிகள் எல்லாம் நன்கு அபிவிருத்தியடைந்திருக்கும். வெளிப்புறத்திலிருந்து பக்க பலப்படுத்தல் நிறுவுதல் அநேகமாகப் பூர்த்தியாகிவிட நில உருவமைப்புகள் உருப்பெறத் தொடங்கும்.



கட்டடத்தின் வடக்குப் பகுதியிலுள்ள புதிய வெளிப்பக்க பலப்படுத்திகளின்மீது ஒரு பார்வை *(October 11, 2021)*

## Stay Connected தொடர்பிலிருங்கள்

உங்களுக்குக் கேள்விகள் இருப்பின்அல்லது இல்லத்தைப்பற்றி மேலும் அறிய விரும்பினால் அழையுங்கள் **905-576-8711 ext. 34167** அல்லது மின்னஞ்சலனுப்ப **AjaxLTC@lh.ca**. நீங்கள் எமது **www.lh.ca** இணையத்தளத்தைப் பார்வையிட்டும் தொடர்ந்து அண்மைய செய்திகளை அறியலாம்!